# ஜனங்களின் மேல் காரிருள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து



# அது சபைக்கு “ஷாலோம்” விசுவாசிகளுக்கு இது வெளிச்சத்தின் நேரம், ஆனால் மற்ற ஜனங்களுக்கோ இது காரிருள்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: ஷாலோம், ஜனவரி 12, 1964

40. 1964-ம் ஆண்டுக்கான என் புத்தாண்டு செய்தி இயேசு கிறிஸ்துவில் தெரிந்து கொள்ளப்பட்ட சபைக்கே. அது சபை குழுக்களுக்கல்ல, ஆனால் தெரிந்து கொள்ளப்பட்ட சபையாகிய சீமாட்டிக்கு, கிறிஸ்துவின் மணவாட்டிக்கு, அவளுக்கு தான் இதை கூறுகிறேன்.

41. நாம் வாசித்த இந்த இரண்டு பொருள்கள் - அல்ல, இரண்டு வேதவாக் கியங்கள் - ஒன்றுக்கொன்று முரணாயுள் ளதை நாம் காண்கிறோம்.

ஏசாயாவில், "எழும்பிப் பிரகாசி, கர்த்தருடைய மகிமை உன் மேல் உதித்தது. ஒளி இங்குள்ளது'' என்று கூறப்பட் டுள்ளது.

ஆனால் அதற்கடுத்த வசனம் ''காரிருள் ஜனங்களை மூடியுள்ளது'' என்று கூறுகின்றது.

ஒளியும் இருளும் கலந்துள்ள நிலையில் நாம் இருக்கும்போது, நான் சபைக்கு அளிக்கும் செய்தி "ஷாலோம், சமாதானம்'' என்பதாம்.

இதெல்லாம் என்னவென்று நாம் காண்போம் பாருங்கள். நாம் இந்த ஆண்டை இருள், வெளிச்சம் இரண்டோடும் சந்திக்கிறோம். நாம்...

**உலகமானது இதுவரை கண்டிராத மிகவும் ஒழுங்கற்ற இருள் நேரத்தை அடைந்துள்ளது. அதே சமயத்தில், அது இதுவரை பிரகாசித்திராத மிகவும் ஆசீர்வாதமான ஒளியைப் பெற்றுள்ளது.**

42. இதன் வித்தியாசம் ஆதியில் எவ்வாறிருந்ததோ, அவ்வாறே. அப்பொ

ழுது பயங்கரமான இருள் பூமியின் மேலிருந்தது. தேவன் ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடி கொண் டிருந்தார்.

அவர், ''வெளிச்சம் உண்டாகக்கடவது'' என்றார்.

தேவன் வெளிச்சத்தையும் இருளையும் வெவ்வேறாக பிரித்தார்.

**தேவன் மறுபடியும் வெளிச்சத்தையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று நம்புகிறேன்.**

**வெளிச்சம் காணப்படவேண்டும் என்பதற் காக அவர் அதை உலகின் மற்ற பாகத்துக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்.**

43. சபைக்கு நான் "ஷாலோம்'' என்று கூறும் காரணம் என்னவெனில், அது

தேவனுடைய சமாதானமாகும். அதைதான் இந்த புத்தாண்டுக்கு, இன்று காலை உங்களிடம் கொண்டு வர விரும்புகிறேன். நாம் பின்நோக்காமல், அந்த நாள் உதிப் பதற்காக நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக் கிறோம். அதுவரைக்கும் நமக்கு முன்னால் பெரியது ஒன்று வைக்கப்பட்டுள்ளது. நாம் எதிர்நோக்கி காத்திருந்த ஆண்டுகள் நமக்கு மகிழ்ச்சியை அளித்து வந்துள்ளன. இப்பொழுது அந்த மகத்தான வெளிச்சம் வருவதை நாம் எதிர் நோக்கி தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறோம். இப்பொழுது அது அடிவானத்தில் தோன்றுவதை நம்மால் காணமுடிகிறது. அது அழிவுக்கும் அழியாமைக்கும் இடையே தோன்றுகிறது. அது வானத்துக்கும் பூமிக்கும் இடையே, வியாதியும் தொல்லையும் நிறைந்த இவ்வுலகத்திலிருந்து, அழியாத ஜீவனும், அழியாத சரீரமும், என்றென்றைக்கும்

ஒழிந்து போகாத அழியாத பூமியில் பிரகாசமான நாளாக உதிப்பதை நாம் காண்கிறோம்.

**அது சபைக்கு "ஷாலோம்" விசுவாசி களுக்கு இது வெளிச்சத்தின் நேரம், ஆனால் மற்ற ஜனங்களுக்கோ இது காரிருள்.**

44. அன்றொரு நாள் நானும் என் மனைவியும் நாம் வாழ்ந்து கொண்டிருக் கும் நேரத்தைக் குறித்து பேசிக்கொண் டிருந்தோம். இந்த இடத்தை நான் தெரிந்து கொண்ட காரணம் என்னவெனில், நான் இங்கு வந்து உங்களிடம் வெளிப்படை யாய் பேசலாம் என்பதே. பாருங்கள், பாருங்கள்? **ஜனங்களின் மேல் ஒரு நேரம் வந்துள்ளது போல் தோன்றுகிறது. நான் நினைத்துப் பார்க்கக் கூடியவைகளில் அது மிகவும் பரிதாபமான நேரம்.**

45. மதசம்பந்தமான விஷயங்களில் நான் மனிதருடன் இணங்காமலிருக்க நான் அதிகமாக முயன்று வந்திருக்கிறேன். நான் கூறினவை எவ்வளவு கடினமாயிருந்த போதிலும், அதன்பிறகு அந்த மனிதனின் கரங்களை நான் பிடித்துக்கொண்டு, "நம்மிடையே இதைக் குறித்து கருத்து ஒற்றுமை உண்டாகவேண்டும் என்பதற் காகவே இது கூறப்பட்டது'' என்று கூறி, அவரை நான் நேசிக்காமல் போனால் (நான் நேசிக்கிறேன் என்று உதடு அளவில் மாத்திரம் கூறுவதல்ல, இருதயப் பூர்வமாக நேசித்தல்). நான் வெளியே சென்று ஜனங்களிடம் பேசுவதற்கு எனக்கு எந்த தகுதியும் இல்லை. பாருங்கள், நாம் அதை செய்யவேண்டும், அந்த நபரை நாம் நேசிக்க வேண்டும். பாருங்கள்? பலதரப் பட்ட ஜனங்களிடையே - வெவ்வேறு கோட்பாடுகள், வெவ்வேறு மதங்கள்

போன்றவைகளைப் பின்பற்றுபவர்களி டையே சென்று, வேதத்தை கீழே வைத்து விட்டு, "உங்கள் கோட்பாடுகளையோ அல்லது உங்கள் பிரமாணங்களின் புத்தகத் தையோ ஆதாரமாகக் கொண்டு இதை விவாதிக்காமல், வேதாகமத்தை ஆதார மாகக் கொண்டு விவாதிப்போம்" என்று கூறும்போது, சில நேரங்களில் ஜனங்கள் கோபப்படுகின்றனர். **ஆயினும், அந்த மனிதன் மீது எனக்கு பிரியமில்லை என்று என் மனதில் ஒரு சிறு எண்ணம் இருக்குமானால், கிறிஸ்துவின் ஆவி என்னை விட்டு போய்விட்டார் என்று அர்த்தம், அந்த நபரின் மீது எனக்குப் பிரியமில்லை என்னும் உணர்ச்சி எனக்கு இருக்குமானால், என்னில் ஏதோ தவறுண்டு.**

46. ஏனெனில் கிறிஸ்துவின் ஆவி. அவருடைய சொந்த ஜனங்கள் ஆணி களைக் கடாவி அவரைச் சிலுவையி

லறைந்த போது; அவர் சிருஷ்டித்த அந்த சிருஷ்டிப்பே அவருடைய மாமிச சரீரத்தில் ஆணிகளைக் கடாவினபோது, அவர் அன்பு நிறைந்த இருதயம் கொண்டவராய், "பிதாவே, இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியா திருக்கிறார்களே" என்று கதறினார். பார்த் தீர்களா?

47. நானும் அந்நிலைக்கு வந்துள் ளேன். **ஜனங்கள், தாங்கள் என்ன செய்கின் றனர் என்று அறியாமலிருக்கின்றனர் என்று எண்ணுகிறேன்.**

**மானிடர் அதிகமாக பொல்லாங்கினால் ஆட்கொள்ளப்பட்டுள்ளனர்.**

**அது மிகவும் பரிதாபமான காரியம் ஜனங்களின் மேல் இருளின் நிழல் அசை**

**வாடி, இவைகளைச் செய்யத் தூண்டுகிறது என்பது போல் தோன்றுகிறது.**

48. இதை எடுத்துக்காட்டாக கூற விரும்புகிறேன். தேசம் முழுவதிலும் சென்று பிரசங்கித்து வரும் போது, தேவனாகிய கர்த்தர் தமது வார்த்தையை உறுதிப்படுத்தி, நிறைவேறாத ஒன்றையும் அவர் கூற அனுமதிக்காமல், கூறப்பட்ட அனைத்தையும் நிறைவேற்றி தந்து, பேசி சிருஷ்டித்து, இப்படிப்பட்ட காரியங்களை செய்து வந்திருக்கிறார். ஜனங்கள் உட் கார்ந்து கொண்டு அதை பார்த்துவிட்டு, அவர்கள் இருந்த நிலையிலேயே தொடர்ந்து இருந்து வருகின்றனர். பாருங்கள்?

49. இதை அவமதிப்பதற்காக கூற வில்லை. நமது சகோதரிகளிடம் எத்த னையோ முறை அவர்கள் இப்படிப்பட்ட

உடைகளை அணிவதைக் குறித்தும், தலைமயிரைக் கத்தரித்துக் கொள்வதைக் குறித்தும் கூறி வந்திருக்கிறேன். மனிதர் களும் தங்கள் கோட்பாடுகளிலேயே நிலைத்திருந்து, அந்த கோட்பாடுகளின் அடிப்படையில் தேவனை ஆராதித்து வருகின்றனர்- அவர்கள் நல்லவர்கள். அவர்கள் மிகவும் அருமையானவர்கள். இருப்பினும் அவர்களால் அதை புரிந்து கொள்ள முடியவில்லை என்பது போல் தோன்றுகிறது. அவர்களால் அதை கிரகித்துக்கொள்ள முடியவில்லை. ஏன்? அடுத்த ஆண்டு அங்கு நான் செல்லும் போது, அவர்கள் திருந்தியிருப்பதற்கு பதிலாக இன்னும் மோசமான நிலையில் உள்ளனர். இது தொடர்ந்து நடந்து வருகிறது. மிகவும் அழகான நீண்ட கூந்தலையுடைய ஒரு சகோதரி இங்கு இருந்தாள். அவள் அதை கத்தரித்து

விட்டாள். இதோ ஒரு மனிதன் சத்தியத்தில் உறுதியாய் நின்று முன்னேறிக்கொண்டிருந்தான்; ஆனால் அவன் பின்வாங்கிப் போய்... நாய் தான் கக்கினதை தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது போல். பாருங்கள், மீண்டும் அதற்கே திரும்பிவிடுகிறான். **ஏதோ ஒன்று ஜனங்களைத் தாக்கினது போல் தோன்றுகிறது, அது உலகத்தை தாக்கியுள்ளது. அவர்களுக்கு புரிந்து கொள்ளும் தன்மை இல்லாதது போல் தோன்றுகிறது. ஏதோ தவறுள்ளது.**

50. மனிதர்களை இன்று நீங்கள் கூர்ந்து கவனித்தால், அவர்களிடம் உண்மையை உங்களால் காண முடியாது. அதை ஸ்திரீகளிலும் காண முடிவதில்லை. நான் இதைப் பேசக் காரணம் என்னவெனில், இதை "ஷாலோம்" என்னும் செய்திக்கு ஆதாரப்படுத்த, பாருங்கள்?

51. இன்றைய பெண்களை நீங்கள் கவனிப்பீர்களானால், முன்பு பெண்களுக்கிருந்த சீமாட்டி சுபாவம் (Lady-like) அவர்களிடமில்லை.

**அவர்கள் அப்படி இருக்க விரும்புகின்றனர். ஆனால் ஏதோ ஒன்று அவர்களைத் தடை செய்கிறது. ஏதோ ஒரு பாரம் உள்ளது போல் தோன்றுகிறது.**

**ஒரு பெண்ணிடம் நீங்கள் அவள் அப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் செய்யக்கூடாதென்று கூறுவீர்களானால், அவள் அதற்கு செவிகொடுத்து அதை நம்புகிறாள். அவள் அதை நம்ப முயற்சி செய்கிறாள். ஆனால் ஏதோ ஒன்று அவளை வேறு பக்கமாக இழுத்து விடுகிறது.**

**பாருங்கள்? ஏழை பெண். அவளுக்காக நான் வருந்துகிறேன்.**

**அவள் ஹாலிவுட்டின் வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறாள்.**

தொலைகாட்சி, வானொலி, செய்தித் தாள்கள் ஆகியவைகளில் செய்யப்படும் விளம்பரங்கள், கடைகளில் செய்யப்படும் நவீன ஆடை விளம்பரங்கள் அவளை சந்திக்கும் மற்ற பெண்கள் உடுத்தியுள்ள விதம் போன்றவை அவளை கவர்ந்து விடுகின்றன.

**அதிலிருந்து அவர்களால் தங்களை வெளியே இழுத்துக் கொள்ள முடியவில்லை என்பது போல் தோன்றுகிறது - வாலிபர், வயோதிபர், நடுத்தர வயதுள்ளவர் அனை வருமே.**

52. மனிதர்களிடையேயும் ஏதோ ஒன்று உள்ளது போல் தோன்றுகிறது. மனிதர்கள், தாங்கள் முன்பு பெற்றிருந்த ஆண்மைத்துவத்தை இப்பொழுது பெற் றிருக்கவில்லை, அவ்வாறே பெண்களும், தாங்கள் முன்பு பெற்றிருந்த பெண்மைத் துவத்தை இப்பொழுது பெற்றிருக்க வில்லை.

இன்றைய மனிதனைப் பாருங்கள். அவன் முன்பிருந்ததைப்போல் இப்பொ ழுது திடகாத்திரமுள்ளவனாய் இருப்ப தில்லை. இது அனைத்தும் ஏதோ ஒரு வகையான... அவர்கள் மிருதுவான தோலி னால் செய்யப்பட்ட இந்திர நீலமுள்ள (purple) காலணிகளை அணிய விரும்பு கின்றனர் அவர்கள் பெண்களைப் போல் நடந்து கொள்ள விரும்புகின்றனர். அது

உண்மை. அது ஏறக்குறைய முறை தவறிய நிலை (Perversion) போன்றது.

**ஒரு பெண் தன் தலைமயிரைக் கத்தரித்துக்கொண்டு ஆணைப்போல் நடந்து கொள்ள விரும்புகிறாள். ஒரு ஆண் பெண்ணைப்போல் நடந்து கொள்ள விரும்புகிறான்.** பாருங்கள்? **இருப்பினும், அவர்களிடம் நீங்கள் பேசினால், பேசுவதற்கு அவர்கள் மிகவும் நல்லவர்கள், நட்பு தன்மை கொண்டவர்கள், நன்றாகப் பழகுபவர்கள்.**

**இதற்கெல்லாம் காரணம் என்ன? ஜனங்களின் மேல் தங்கியுள்ள காரிருளே அவர்களை இவ்வாறு செய்யத் தூண்டுகிறது.**

53. இயேசு இவ்வுலகில் வந்தபோது இருந்த யூதர்களைப் போல், ஏசாயா

அவர்களைக் குறித்து, "அவர்களுக்கு கண் களிருந்தும் காணாமலும் காதுகளிருந்தும் கேளாமலும் இருக்கிறார்கள்" என்றான். அதன் காரணமாகத்தான் இயேசு அவர் களை மன்னிக்கும்படி ஜெபித்தார். வேத வாக்கியம் நிறைவேறுவதற்காக அது அப்படி இருக்கவேண்டியதாயிற்று.

54. அது மறுபடியும் நம்மிடத்தில் திரும்ப வந்துள்ளது. நாம் வாழ்ந்து கொண் டிருக்கும் இந்நாளைக் குறித்து, வேதம் முன்னுரைத்து, இவை நிகழுமென்றும் "காரிருள் ஜனங்களை மூடும்" என்றும் கூறுகின்றது. அதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். **அதில் ஏதோ ஒன்றுள்ளது, ஜனங்கள் செய்ய வேண்டுமென்று விரும்பு கின்றனர். ஆனால் அவர்களால் முடிய வில்லை.**

55. நிக்கொதேமு ஒருமுறை இயேசுவிடம், "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்" என்றான். ஆனால் யூத ஜாதியின் மீது அந்த இருள் இருந்தது, அவர்கள் குருடராயிருந்தனர். மேசியா புறஜாதிகளிலிருந்து ஒரு மணவாட்டியைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக இப்படி நடந்தது. அவர்கள் அவரைப் புறக்கணிக்க வேண்டியதாயிற்று.

56. அதுதான் இன்று சபைகளின் மேலும் மற்றவைகளின் மேலுமுள்ள காரிருள்.

**வெளிச்சம் பிரகாசித்துக்கொண்டிருப்பதை அவர்கள் காணத்தவறுகின்றனர்.**

**பாருங்கள்? பலமான தூண்டுதல் உள்ளது போல் தோன்றுகிறது.**

இன்றைய புகழ் வாய்ந்த சுவிசேஷகர்களை நாம் எடுத்துக்கொள்வோம். அவர்கள் ஒரு எழுப்புதலுக்காக எப்பொழுதும் கூச்சலிட்டுக்கொண்டிருக்கிறனர், ஆனால் அதற்கு விரோதமாக அவர்கள் கிரியை செய்து கொண்டிருக்கின்றனர்; பாருங்கள், அவர்களுக்குப் புரிந்துகொள்ளும் தன்மை இல்லை.

57. 'நாங்கள் இதைக் கண்டு கொண்டோம், தேவனுக்கு மகிமை. அவர்கள் அதில் இல்லை' என்னும் மனப்பான்மையுடன் இதைக் கூறவில்லை. "சகோ. பிரன்ஹாமே, நீங்கள் ஒருவர் மாத்திரமே உலகத்தில் காணப்படும் சத்தியத்தைப் பெற்றிருக்கின்றீர்கள்" என்று ஜனங்கள் நினைக்கவேண்டும் என்பதற்காக இதை

நான் கூறவில்லை. இல்லை, அது தவறு. பாருங்கள்?

58. இந்த வெளிச்சத்தை தேடிக்கண்டு பிடிக்க முயன்று கொண்டிருப்பவர்கள் பயனடைய வேண்டும் என்பதற்காக. நாம் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் காணப் படும் வெளிச்சத்தைக் குறித்துக் கூறிக் கொண்டிருக்கிறேன். உண்மையாக. இயேசு "என் பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளா விட்டால், அவன் என்னிடத்தில் வரமாட் டான்'' என்றார் யாரும் அதைக் காண முடியாது. முன்குறிக்கப்பட்ட வித்து மாத் திரமே அதை ஏற்றுக்கொள்ளப் போகின் றது. நாம் மறுபடியும் அந்த இடத்துக்கு வந்திருக்கிறோம். வேதம் ''நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்று கூறுகிறது.

59. **தீர்க்கதரிசி, "காரிருள் ஜனங் களை மூடும்" என்றான். இக்காலத்தில் உலகத்திலுள்ள ஜனங்களை. அதைதான் நாம் பெற்றிருக்கிறோம் - ஜனங்களின் மேல் காரிருள்.**



நீங்கள் என்னை அவருடைய ஊழியக்காரனாக எண்ணினால், இது நாளின் முதலாவது பகல் வெளிச்சம் தோன்றும் நேரத்திற்கு (break of the day) சற்று முன்புள்ள நேரமாக உள்ளது. அதன் காரணமாகத்தான் பூமியின் மேல் இந்த பயங்கரமான இருள் உள்ளது. இது கர்த்தராகிய இயேசுவின் வருகைக்கு சற்று முன்புள்ள நேரமாகும். இதற்கு மேலும் அவருடைய வருகையைத் தவிர அங்கே வேறெந்த நம்பிக்கையும் எதிலும் விடப்படவில்லை.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது?, ஞாயிறு காலை, நவம்பர் 30, 1958

இந்தத் திரளான விளங்காத மர்மமான காட்சிகள், சம்பவிக்கும் என்று இயேசு சொன்ன காரியங்களுக்கு மிகச்சரியாக இருக்கிறதா என்று வியப்படைகிறேன். "மேலே வானத்திலும் பூமியிலும் அடையாளங்கள் உண்டாகும்; தேசங்களுக்கிடையே தத்தளிப்பு உண்டாகும்; குழப்பமான நேரம் உண்டாகும்; பல இடங்களில் பூமியதிர்ச்சிகள் உண்டாகும்; இருதயம் செயலற்றுப் போய் மனிதன் மரித்துக் கொண்டிருக்கிறான்.' ஸ்திரீகள் அல்ல, மனிதர்கள். ஸ்திரீகள் இருதயக்கோளாறினால் அடிக்கடி மரிப்பதில்லை; மனிதர்கள் தான் அவ்வாறு மரிக்கிறார்கள். அது அவ்வாறு சம்பவிக்

கும் என்று இயேசு சொன்னதை நிறை வேற்றுகிறது. அது அவ்விதம் இருக்கும் என்று அவர் கூறினது மிகச்சரியாக உள்ளது.

65. மேலும் அப்படியானால், இந் நாளைக் குறித்து தீர்க்கதரிசிகள் எல்லாரும் எவ்வாறு தீர்க்கதரிசனம் உரைத்திருக்கி றார்கள் என்று நாம் அவர்கள் பேரில் மணிக்கணக்காக (பேசிக்கொண்டே) போகையில், அது ஒருவரை, "ஜாமக் காரனே, இரவு எவ்வளவு சென்றது?' என்று கூச்சலிடச் செய்யாதா? பென்டக னிடம் பதில் கிடையாது. ஐக்கிய நாடுகளிடம் பதில் கிடையாது. ஜெர்மனி, ரஷ்யா, அவர்கள் யாரிடமும் பதில் கிடையாது. விஞ்ஞானத்திடம் இதற்கான தீர்வு கிடையாது. யாரிடம் இதற்கான தீர்வு இருக்கிறது? மதிற்சுவற்றின் மேலிருக்கிற ஜாமக்காரனிடம் தான் இதற்கான தீர்வு

இருக்கிறது. "ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது?'

66. ஜனங்களை ஆயத்தப்படுத்தி தேவனிடமிருந்து வருகிற எச்சரிக்கைகளை அவர்களுக்கு கொடுக்கிற ஜாமக்காரன் பரிசுத்த ஆவியானவரே. அவர் ஒரு ஜாமக்காரனாக அமர்த்தப்பட்டிருக்கிறார். வியாதியஸ்தர் சுகமடைவதையும், குருட ரின் கண்கள் திறக்கப்படுவதையும், செவிட ரின் காதுகள் திறக்கப்படுவதையும், முட வர்கள் நடப்பதையும், முடமாயிருக்கிற வர்கள் ஆண்மானைப்போல துள்ளிக்குதிப் பதையும் (சகோ. பிரன்ஹாம் துள்ளிக் குதித்தல் leaping என்று கூறுவதற்குப் பதிலாக leaking என்று கூறி விடுகிறார் – மொழிபெயர்ப்பாளர்.) நாம் காண்கிறோம்: நிறைவேற்றுகிறது... அது என்ன? அது கர்த்தருடைய வருகையை உந்தித் தள்ளுதலாகும்.

67. இந்த காரியங்கள் மற்றும் இந்த எச்சரிக்கைகள் யாவற்றிற்கும் (பிறகும்), ஜனங்கள் தங்களுடைய மூடத்தனத்தை அடையும் நேரம் மட்டுமாக, அவர்கள் தொடர்ந்து தங்கள் பீர் விருந்துகளுக்குப் போகிறார்கள். மேலும் அவர்கள் கும்மாளம் போடுகிறார்கள், அவர்கள் நடனம் ஆடுகிறார்கள், புசிக்கிறார்கள், குடிக்கிறார்கள், பெண் கொண்டு, பெண் கொடுக்கிறார்கள். அது சம்பவிக்கும் என்று தேவன் சொன்னவிதமாகவே அவர்கள் செய்கிறார்கள்... அவர்களை நிறுத்த எந்த வழியும் இல்லை.

68. அதன்பிறகு நீங்கள் கவனிப்பீர்களானால், வெளிப்படுத்தல் 3-ன்படி, இந்த மகத்தான சபைக்காலத்தில், வருகைக்கு சற்று முன்பாக இப்பொழுதிருக்கிற இக்காலத்தில் விடிவெள்ளி நட்சத்திரத்தை கொடுத்திருக்கிறவராக இருந்தார்.

69. ஏசாயா, "ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது?' என்று கூறினபோது, அது எவ்வளவு வேதப்பிரகாரமானதாக இருந்தது என்பதைக் கவனியுங்கள். அவன், "விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது' என்றான். என்ன? விடியற்காலம் வருகிறது, ஆனால் விடியற்காலம் வருவதற்கு முன்பு இராக்காலம் வருகிறது. அது என்னவாக இருந்தது? ஒரு நாளில் முதலாவது சூரிய வெளிச்சம் தோன்றுவதற்கு சற்று முன்பு, பகற்காலம் சமீபமாயிருக்கும் அந்த மணி நேரத்தில், அது எப்பொழுதும் இருந்ததைக் காட்டிலும் இருளாக மாறுகிறது என்பதை எவருமே அறிவர்.

70. ஓ, என் நண்பர்களே, "***கர்த்தர் உரைக்கிறதாவது!***' என்பதற்கு செவி கொடுங்கள். **நீங்கள் என்னை அவருடைய**

**ஊழியக்காரனாக எண்ணினால், இது நாளின் முதலாவது பகல் வெளிச்சம் தோன்றும் நேரத்திற்கு (break of the day) சற்று முன்புள்ள நேரமாக உள்ளது. அதன் காரணமாகத்தான் பூமியின் மேல் இந்த பயங்கரமான இருள் உள்ளது. இது கர்த்தராகிய இயேசுவின் வருகைக்கு சற்று முன்புள்ள நேரமாகும். இதற்கு மேலும் அவருடைய வருகையைத் தவிர அங்கே வேறெந்த நம்பிக்கையும் எதிலும் விடப்பட வில்லை.**

71. தேசங்கள் தேசங்களுக்கு விரோத மாய் உள்ளன, அவர்கள் ஒருவர் மற்றவர் மேல் அணு சாம்பல்களை வீசியெறிந்தக்க வல்லமையைக் கொண்டிருக்கும் அள வுக்கு தேவனுடைய சோதனைக்கூடத்தின் வழியாக அவர்கள் முட்டாளாக்கப்பட் டிருக்கிறார்கள். மேலும் அவர்கள்

துன்மார்க்கராய் இருக்கிறார்கள், அவர்கள் பக்தியற்றவர்களாய் இருக்கிறார்கள், கிறிஸ்துவைப் பின்பற்றாதவர்களாய் இருக்கிறார்கள். மேலும் அவர்களிடமுள்ள ஒரே நோக்கமும் குறிக்கோளும் என்ன வென்றால் அழிப்பது தான். இந்த மனிதர் களை தூண்டுவதற்காக பரலோகத்தி லிருந்து அனுப்பப்பட்ட, அழித்துப் போடும் தூதனாலே (destroying angel) அவர்கள் ஏவப்படுகிறார்கள்.

72. நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் கூறட்டும், பரிசுத்த ஆவியான வர் கோபுரத்தின் மேலிருக்கிற ஒரு ஜாமக்காரனாக அனுப்பப்பட்டிருக்கிறார்.

மேலும், ஜனங்கள், "இரவு எவ்வளவு சென்றது?' என்று கதறுகையில். நீங்கள் இந்த ஜீவியத்தைக் குறித்து சலிப்படைந் துள்ளீர்களா? நீங்கள் பாவத்தைக் குறித்து

சலிப்படைந்துள்ளீர்களா? ஒவ்வொருவருடைய அடக்க ஊர்வலங்களைக் குறித்தும், வியாதியைக் குறித்தும், எல்லா பக்கங்களிலும் இருக்கிற தெய்வபக்தியில்லாத நிலையைக் குறித்தும் நீங்கள் சலிப்படைந்துள்ளீர்களா? இரவு நீண்டதாகவும், சலிப்பானதாகவும் இருக்கிறதா? "ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது?'

அவன், "விடியற்காலம் வருகிறது' என்று கூறினான். ஆறுதலைப் பாருங்கள். "இராக்காலமும் வருகிறது.' இரவு எவ்வளவு சென்றது?

73. ஏசாயாவிலுள்ள வேதவாக்கியத்தோடு எவ்வளவு பரிபூரணமாகப் பொருந்துகிறது என்று பாருங்கள். **இயற்கையின் வழக்கமான போக்கில், எப்போதுமே சூரியனானது நெருங்கி வருகின்ற போது,**

**இருளானது ஒன்றாக வந்து அதை அந்தகாரப்படுத்துகிறது. இரவிலுள்ள மற்ற எந்த நேரத்தைக் காட்டிலும் பகலுக்கு முன்பு இருளாக உள்ளது. ஏன்? வெளிச்சமானது சமீபமாயிருக்கிறது, அதுவே அதை இருளாகச் செய்கிறது.**

74. கர்த்தராகிய இயேசுவின் (வருகை) நெருங்கிக் கொண்டிருப்பது தான், பூமி யின் மேலிருக்கிற இந்த இருளைக் கொண்டு வருகிறது. "இவைகள் சம்ப விக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலையை உயர்த்துங்கள்' என்று அவர் கூறவில்லையா?

75. பாலஸ்தீனா என்பது ஒரு தேசம். யூதர்கள் பூமி முழுவதிலுமிருந்து திரும்பி வருவார்கள் என்று தேவன் கூறினபிரகார மாக, அவர்கள் பூமி முழுவதிலுமிருந்து

திரும்பி வந்து, அவர்கள் **அவர்** வருவதைக் காண அங்கே அவ்விடத்தில் இருக்கிறார்கள். "அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள், அது துளிர்விடும் போது.' அவர், "அப்படியே இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகாது, ஒழியாது – அது ஒருபோதும் முடிவடையாது' என்றார்.

76. எந்த சந்ததி? அத்திமரம் துளிர் விடுவதைக் காணும் சந்ததி. இஸ்ரவேல் எப்போதுமே அத்திமரமாக இருந்து வருகிறது. "பச்சைப்புழு விட்டதை கம்பளிப்பூச்சி (caterpillar) தின்றது' என்று யோவேல் கூறினான். "கம்பளிப்பூச்சி விட்டதை கொக்கிப்புழு (hookworm) தின்றது, கொக்கிப்புழு விட்டதை வெட்டுக்கிளி (locust) தின்றது.' நீங்கள்

கவனம் செலுத்துவீர்களானால், அது அதே பூச்சி தான். அந்த மரத்தைத் தின்ற அந்த பூச்சிகள் யாவுமே ஒரே பூச்சி தான், வித்தியாசமான நிலைகள் மாத்திரமே.

77. இயேசு கிறிஸ்துவாக இருக்க வில்லை என்று யூதர்களைத் தின்று போடத் தொடங்கின அதே பாவமும் அவிசுவாச மும் தான் வெறுமையான அடிக்கட்டை வரை அந்த மரத்தைத் தின்றது... மேலும் தீர்க்கதரிசி அதைப்பார்த்து அழுதான். ஆனால் கர்த்தரோ, "முசுக்கட்டைப் பூச்சி களும், வெட்டுக்கிளிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த எல்லா வருஷங் களின் விளைவை நான் திரும்ப அளிப் பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்' என்றார். 2500 வருடங்களில் முதல் தடவையாக யூதர்கள் தங்களுடைய தாய் நாட்டிற்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். "இந்த காரியங்கள் சம்பவிக்கும் முன்னே

அந்த சந்ததி ஒழிந்து போகாது – ஒரு முடிவுக்கு வராது. அதன்பிறகு கடைசி நாட்களில் என் குமாரர்கள் மேலும் குமாரத்திகள் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று தேவன் உரைக்கிறார். அவர்கள் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள், நான் அற்புதங்களைக் காட்டுவேன்.'

78. வியாதியஸ்தர் சொஸ்தமடைகிறார்கள். உட்கார்ந்து, அவருக்கு பின்னாக இருந்த அறையில் இருந்து நகைத்த சாராளைக் குறித்து ஆபிரகாமிடம் கூறக் கூடிய அதே ஆவியினால் மகத்தான வல்லமைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படியானால் நாம், "ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது?' என்று கூவி அழைக்கிறோம்.

79. மேலும் அவன், "இராக்காலம் வருகிறது' என்றான். இரவை முதலாவது

கவனியுங்கள்... முதலாவது விடியற்காலம் வருகிறது, அப்போது இரவும் கூட வருகிறது. எப்போதுமே முதலாவது பகல் வெளிச்சம் வருவதற்கு சற்று முன்பு, வானங்களில் ஒரு மகத்தான வெளிச்சம் இருக்கிறது, அதுதான் விடிவெள்ளி நட்சத்திரம். விடிவெள்ளி நடசத்திரமானது பிரகாசமாக, பிரகாசமாக, பிரகாசமாக ஆவதை நீங்கள் காணும்போது, பூமி யானது இருளாக இருளாக ஆகிறது. பூமியானது இருளாக இருக்கிற காரணத் தினால் தான் அது பிரகாசமாக இருக்கிறது.

80. இந்தக் கடைசி நாட்களில், கிறிஸ்துவின் சரீரத்தில் தெரிந்து கொள்ளப் பட்டு, வெளியே அழைக்கப்பட்ட சபைக்கு விடிவெள்ளி நட்சத்திரத்தை அவர் கொடுப் பதாக வேதாகமத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது.

81. **"ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது? என்ன சம்பவிக்கப் போகிறது?' இதோ அது உள்ளது: முழு உலகத்துக்கும் சர்வ சங்காரம் (total annihilation) வருகிறது. ஆனால் அந்த சங்காரம் வருகிறதற்கு முன்பு, இயேசு கிறிஸ்துவின் சபையானது அவளுடைய கர்த்தரை சந்திக்கும்படி எடுத்துக் கொள்ளப்படுதலில் போய் விடும்.**

82. விடிவெள்ளி நட்சத்திரம் என்ன செய்கிறது? நட்சத்திரங்களை அந்நேரத்தில் மிகப்பிரகாசமாக ஆக்குவது எது? அது சூரியன் நெருங்கி வருகிற காரணத்தினால் தான். விடிவெள்ளி நட்சத்திரமானது சூரிய னுடைய வெளிச்சத்தை பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. அந்த மணி நேரத்தில் மற்ற நட்சத்திரங்கள் ஒளியில்லாமல் காணப்படும்.

83. மனிதனால் உண்டாக்கப்பட்ட வேதசாஸ்திரங்கள் யாவும், குளிர்ந்த, சம்பிரதாய முக்கியமற்ற காரியங்கள் யாவும் மறைந்து போய் விடும். ஆனால் அந்த ஜாமக்காரன் சீக்கிரமாக சமீபித்து வர இருக்கிற கர்த்தராகிய இயேசுவின் உண் மையான செய்தியை பிரதிபலித்துக் கொண்டிருக்கிற விடிவெள்ளி நட்சத் திரத்தோடு, அதோ அங்கிருக்கிற அந்த கோபுரத்தின்மேல் அமர்ந்திருக்கிறான், ஏனெனில் சூரியனானது உதிக்கத் துவங் குகையில், அவர் எல்லா நேரமும் பிரகாச மாகி பிரகாசமாகிக் கொண்டேயிருக்கிறார்.

84. ஓ, நான், "விடிவெள்ளி நட்சத் திரங்களே, தேவனுடைய மகிமைக்கு நேராக எழும்பி பிரகாசியுங்கள். நெருங்கி வருகிற நள்ளிரவுக்காக - பூமியின் மேல் இருள் இருக்கிறது, ஜனங்களின் மேல்

முழுமையான இருள் இருக்கிறது' என்று கூறுவேன்.

85. ஆனால் விடியற்காலம் வருகிறது, நட்சத்திரங்கள் தங்கள் வெளிச்சத்தை கொடுத்துக் கொண்டிருக்கின்றன. முழு உலகத்தையும் நோக்கியிருக்கிற அந்த பயங்கரமான மணிநேரத்தைக் குறித்து எண்ணிப்பாருங்கள். இன்று இரட்சிக்கப் படாத ஒவ்வொரு நபருக்கும் எதிராக நிற்கிற அந்த பயங்கரமான இருளைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். செழிப்பா யிருக்கிற தேசங்கள் யாவும், மலைகள் யாவும், பண்ணைகள் யாவும், வீடுகள் யாவும் கண்ணிமைக்கும் நேரத்தில் மீண்டும் எரிமலை சாம்பலுக்கு தூளாக ஆகிவிடும்.

86. ஆனால் கர்த்தரை நேசிக்கிறவர் களும், விடிவெள்ளி நட்சத்திரத்தினுடைய

வெளிச்சத்தைக் கொண்டிருப்பவர்களும், அவர்கள் தங்களுடைய கண்களை உலகத்தின் காரியங்களை விட்டு விலக்கி, அவர் மேல் பதித்திருக்கிறார்கள்...

87. பவுல் பூமியை விட்டு போவதற்கு முன்பு, தன்னுடைய கடைசி நிரூபத்தை எழுதும் போது, அவன் சோர்வடைந்தவ னாகவும், பதட்டமாகவும், களைப்படைந் தவனாகவும் இருந்தான். ஓ, அச்சிறிய யூதன், "ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக. நான் நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் அங்கே இருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்' என்று கூறினபோது, நான் அவனுக்காக எவ்வள வாக இரக்க உணர்ச்சி கொள்கிறேன்.

அப்போது அவன் விடிவெள்ளி நட்சத்திரங்கள் வந்து கொண்டிருப்பதைக் குறித்து எண்ணினான். அவன், "எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்' என்றான்.

88. ஓ, நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள், உங்கள் மீட்பு சமீபமாயுள்ளது. "ஜாமக்காரனே, எது செய்தித்தாள்கள் இதைக் கூறும்படி செய்கின்றன? எது விஞ்ஞானம் இயங்குவதற்கு பயத்தை உண்டுபண்ணுகிறது? பென்டகனானது தகவலை வெளியில் சொல்ல எது பயத்தை உண்டுபண்ணுகிறது? காரணம் என்னவெனில், ஜனங்கள் தங்களுடைய பணத்தை தெருவிலும் (மற்ற) காரியங்களிலும் எறிந்து விட்டு தற்கொலை செய்து கொள்வார்கள். என்ன - என்ன காரியம்? இது என்ன? இரவு எவ்வளவு சென்றது?'

விடியற்காலம் வருகிறது. அது உண்மை. இது எல்லாவற்றையும் குறித்தென்ன? அது விடியற்காலம் வரும்படி செய்கிறது. மேலும் அது (வெளிச்சத்தை) முன்னோக்கித் தள்ளுகிறது, வெளிச்சமானது பிரகாசிப்பதற்கு சற்று முன்பு, அது அடர்த்தியான இருளை வரச் செய்கிறது.

89. நான் ஒரு கிறிஸ்தவனாக இருப்பதற்காக மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் அவருடைய ஜாமக்காரனாக இருப்பதற்காகவும், நான் அவர்களில் ஒருவனாக இருப்பதற்காகவும் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்; கோட்டை சுவரின் மேல் நின்று கொண்டு, "தேவனை சந்திக்க ஆயத்தப்படு, அவருடைய வருகையின் வேளையானது சமீபமாயிருக்கிறது' என்று கூக்குரலிடுவதற்காக மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

90. அந்த மகத்தான பரிசுத்த ஆவியாகிய அதிகாலை விடிவெள்ளி நட்சத்திரமானது அதன் வெளிச்சத்தை உங்கள் இருதயங்களில் பிரதிபலிப்பதைக் குறித்து உறுதியில்லாமல் இருக்கிற ஒருவர் இக்காலை வேளையில் இங்கே இந்த சபையில் இருந்தால், நீங்கள் அதற்காக ஆயத்தப்படுவீர்களாக. எப்பொழுதும் சம்பவித்ததிலேயே மிகப்பெரிய ஒரு சம்பவம் நடப்பதற்கு இப்பொழுது சமீபமாயுள்ளது.



# நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-0121E — ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

24 நானும் மனைவியும் பீனிக்ஸை மீண்டும் பார்க்க தெற்குப்புற மலைக்குச் சென்றிருந்தோம். சுமார் முன்னூறு ஆண்டு களுக்கு முன்னர் இங்கே அநேகமாக ஓநாய்கள், கற்றாழைகள் முதலியவற்றைத் தவிர வேறொன்றுமே இருந்திருக்காது என்பதை நான் எண்ணிப்பார்த்தேன். இப்பொழுதோ அது ஒரு மகத்தான நம்ப முடியாத நகரமாய் உள்ளது. அப்பொழுது நான், "தேனே, இது மாற்றமடைந்துள்ளதா அல்லது தாறுமாறாக்கப்பட்டுள்ளதா? உன்னுடைய விருப்பத்தை நீயே தெரிவிக் கலாம். ஆனால் எனக்கோ இப்பொழுது இது தாறுமாறாக்கப்பட்டிருக்கிறது. கார

ணம் இங்கு மது அருந்துதல், சூதாடுதல், புகைப்பிடித்தல், பொய்யுரைதல், திருடு தல், மதுபானக்கடைகள் மற்றுமுள்ள ஒவ்வொரு பொல்லாத காரியத்திற்கும் பதி லாக ஸ்திரீகளும், புருஷர்களும் தங்களு டையக் கரங்களை தேவனண்டை உயர்த்தி, தேவனைத் துதித்துக் கொண்டே வீதிகளில் நடந்துகொண்டும், சகோதர சகோதரி களைப் போன்று வாழ்ந்துகொண்டிருந் தால், அப்பொழுது இந்த மகத்தான கட்டிடங்கள் மற்றும் அழகான கட்டிட அமைப்புகளும் அருமையாய் இருக்கும். அவை எல்லாவற்றிற்கு மத்தியிலும், இருந்தபோதிலும்...” என்று கூறினேன்.

அப்பொழுது மனைவியோ என்னிடத் தில், “அப்படியானால் பில்லி, நீர் இங்கே எதற்காக இருக்கிறீர்?” என்று கேட்டாள்.


25 அதற்கு நான், “தேனே, ஆனால் நாம் இங்கே பதினைந்து நிமிடங்களாக இருந்தது முதற்கொண்டு, அந்தப் பள்ளத் தாக்கினூடாக எத்தனை பொய்கள் கூறப் பட்டுள்ளன? எத்தனை ஆணையுறுதிகள் கர்த்தருடைய நாமத்தில் வீணாய் எடுக்கப் பட்டுள்ளன? எத்தனை சிகரெட்டுகள் புகைக்கப்பட்டு, எத்தனை மதுபானங்கள் அருந்தப்பட்டுள்ளன? நாம் இங்கே இருக்கிற இந்தக் கொஞ்ச நேரத்திற்குள் எத்தனை விபச்சாரங்கள் செய்யப் பட்டன?” என்று கேட்டேன்.

அதற்கு அவளோ, “அது மட்டுமீறிய தாயிருக்கிறதல்லவா?” என்றாள்.

26 பின்னர் நான், “தேனே, இந்தச் சூழலில் நாம் இங்கே என்னத்திற்காக இருக்கிறோம். நாம் இங்கே இருந்தது

முதற்கொண்டு எத்தனை உண்மையுள்ள ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டுள்ளன? ‘நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக் கிறீர்கள்.’ இங்குள்ள இந்தச் சிறு சபைக ளோடு நம்முடைய தோள்களைக் கொடுத்து, நம்மால் முடிந்த ஒவ்வொரு காரியத்தையும் செய்து, அவைகள் தொடர்ந்து செயல்பட உதவி செய்வதற் காகவே நாம் இங்கிருக்கிறோம். ஒரு...இருக்க...” என்றேன்.

# I got a lot of secrecy in my own life, of course between God and I



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 53-1112 — Demonology

26 Here's a channel right here. I don't tell this before people. I got a lot of secrecy in my own life, of course between God and I. But looky here.

There's a channel like this, and that's where mortals live in here.

In it's a conglomeration of gaity, and blackness, and sin.

And every once in a while, you see a little white spot or a light.

Jesus said, "You are a light that sets on a hill. Don't light a candle and put a bushel over it."

That's Christians in this conglomeration of this dimension of mortals.

Well, going this a way downward, the next dimension is the souls of the unjust who died not knowing God. The second is demons. And the third in the trinity is hell: unjust souls, demons, and hell.

There's a trinity here. One of them was caught into the third heaven.

The first is a Ghost too: the Holy Ghost; second, angels; third, heaven itself.

Now, these mortals in this dimension here, is influenced either from there or from here.

# ஜனங்களின் மேல் காரிருள்

